41. தமிழாக்கம் தருக.

1) An eye for an eye only ends up making the whole world blind.

2) Education is the most powerful weapon, which you can use to change the world.

3) Roads were made for journeys not destinations.

4) Knowledge rules the world.

42. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

1. வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி)- ________

2. அளந்து அளந்து கொட்டிடுவான்; அகம் மகிழத் தந்திடுவான் (ஆள்) - ____

3. அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) - ____

4. வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) - ____

43. பாடாண் திணையை சான்றுடன் விளக்குக. (அல்லது)

பொருண்மொழிக் காஞ்சித்துறைக்கு சான்று தந்து விளக்குக.

பகுதி - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (3x6=18)

44. அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

(அல்லது)

ஆ) தலைவியின் இல்லறப்பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

45. அ) 'சுற்றுச்சூழலை மேம்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.

(அல்லது)

ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதுமையாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46. அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் ஆடுஜீவிதத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

(அல்லது)

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. (4+2=6)

அ) 'உண்டால் அம்ம'___ - எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'பகை' - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



| முதல் திருப்புதல் தேர்வு - 2024 | தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

காலம் : 3.00 மணி **XI - தமிழ்** மதிப்பெண் : 90

பகுதி - 1

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ii) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (14x1=14)

1. ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கிடைத்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து

அ) மொழி என்பது திட திரவ நிலையில் இருக்கும்

ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை

இ) எழுத்து மொழியை விட பேச்சுமொழி எளிமையானது

ஈ) பேச்சு மொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது

2. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்

ஆ) குறைந்த அடித்தொகை அதனை நூற்றுநூறு பாக்களுள் உடையது

இ) ஏதிலிக் குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்

ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறிய முடியும்

3. ஐங்குறுநூற்றில் நெய்தல் திணையைப் பாடியவர்

அ) பேயனார் ஆ) ஓதலாந்தையார் இ) ஓரம்போகியார் ஈ) அம்மூவனார்

4. "இனிதென" - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

5. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றேதான் ___ இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

6. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை

அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

7. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு

அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி

ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை இ) பெயரெச்சம், பண்புத்தொகை

8. மகிழ்ச்சியின் மைந்துறும் போற்று ________ நினை

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

9. அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர்

அ) ஆனந்த ரங்கர் ஆ) கூடலூர்க் கிழார்

இ) மாணிக்கவாசகர் ஈ) திரிகூட ராசப்பக் கவிராயர்

10. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதை கிரீடம்' என்று போற்றப்படுவது

அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

11. சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளை எடுத்தியம்பும் எட்டுத்தொகை நூல்

அ) புறநானூறு ஆ) பரிபாடல் இ) பதிற்றுப்பத்து ஈ) குறுந்தொகை

12. 'ஜனப் பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை

இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

13. பத்திகளை இணைக்கவும் என்பதற்கான குறியீடு

அ) ^ ஆ) ⌒ இ) ⌐¬ ஈ) #

14. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? இது எவர் மொழி?

அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

பகுதி - 2

பிரிவு - 1

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x2=6)***

15. என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே!

**- இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலனையும் பெயர்களை எழுதுக.**

16. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?

17. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

18. "கற்றேன் என்பாய் கற்றாயா"? என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.*** ***(2x2=4)***

19. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி பற்றிக் கூறுக.

20. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

21. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக.*** ***(7x2=14)***

22. ***தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.***
நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

23. ***மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***
குரை, குறை

24. ***வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.***
அனைத்து துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.



25. ***சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.***
அ) அறிவில்லாதவன் ***(அல்லது)*** ஆ) நஞ்சிருக்கும்

26. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?

27. ***பொருள் மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக.***
நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன்

28. ***ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.***
அ) முளைத்த ஆ) அலர்ந்து

29. ***ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.***
அ) புகழெனின் ஆ) மண்ணுடை

30. ***கலைச்சொல் தருக.***
அ) Farmyard Manure ஆ) Pseudonym

பகுதி - 3

பிரிவு - 1

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x4=8)***

31. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

32. 'ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. "கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது" யாது?

34. சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x4=8)***

35. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

36. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

37. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்? விளக்குக.

38. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.

பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x4=12)***

39. அ) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. - ***இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை சுட்டி விளக்குக.***

***(அல்லது)***

ஆ) உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.

40. ***இலக்கிய நயம் பாராட்டுக.***

***(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)***

தண்டலை மயில்கள் ஆட,
தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க,
குவளை கண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட,
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட,
மருதம் வீற்றிருக்கும் மாதோ. ***- கம்பர்.***



Scanned with OKEN Scanner

www.Padasalai.Net